


30. 08. 2026

தலைப்புச் செய்திகள்

- "போதை பொருள் இல்லா இளையோர் இயக்கம்" வலுப்பெற்று வருவதாக பிரதமர் திரு. நரேந்திரமோடி மனதின் குரல் நிகழ்ச்சியில் தெரிவித்துள்ளார்.
- இளைஞர்கள், உடற்பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மத்திய அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.
- நேபாள பெருவெள்ளத்தில் சிக்கியுள்ள தமிழகத்தை சேர்ந்த 219 பேர் இந்த வாரத்திற்குள் தாயகம் திரும்புவார்கள் என மாநில அமைச்சர் திரு. ராஜ்மோகன் கூறியுள்ளார்.
- போதையில்லா தமிழகம் என்பதை வலியுறுத்தி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று விழிப்புணர்வு மாரத்தான் நடைபெற்றது.
- ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

**************

மன்-கீ- பாத்

"போதை பொருள் இல்லா இளையோர் இயக்கம்" நாடுமுழுவதும் வலுப்பெற்று வருவதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 137-வது முறையாக இன்று உரையாற்றிய அவர், இந்த இயக்கத்தில் இளைஞர்களின் பங்களிப்பு மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம் போதை பொருள் புழக்கத்தை முற்றிலும் ஒழிக்க முடியும் என்று கூறிய பிரதமர், போதை பழக்கம் தனி நபரை மட்டுமன்றி ஒட்டுமொத்த குடும்பம் மற்றும் சமூகத்தை பாதிப்பதாக சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்த சமூக மாற்றத்திற்கான விழிப்புணர்வு பாடல்களை உருவாக்க இளம் இசை கலைஞர்கள் முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொண்ட பிரதமர் அவர்கள் தங்களது படைப்புகள் மூலம் வலுவான விழிப்புணர்வை ஏற்படுத்த முடியும் என்றார்.

பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதன் மூலம் ஒட்டுமொத்த குடும்பத்தின் எதிர்காலம் செழிப்படையும் என்று கூறிய பிரதமர், ஸ்வாநிதி திட்டத்தின் மூலம் நாடுமுழுவதும் 35 லட்சம் மகளிர் தங்களது தொழிலை விரிவுபடுத்தியுள்ளதாகவும், பெண்கள் புதிய வலிமை பெற்று வருவதாகவும், கூறினார்.

பெண் குழந்தைகளின் கனவுகள் தற்போது பூமியிலிருந்து விண்வெளி வரை பறந்து காணப்படுவதாக சுட்டிக்காட்டிய பிரதமர் மிஷன் சக்தி சாட் திட்டத்தின் மூலம் உத்திரபிரதேச மாநிலம் கவுதம புத்தர் பல்கலைகழகத்தின் புத்தாக்கத்துறையில்

108 நாடுகளை சேர்ந்த 12 ஆயிரம் மாணவிகள் தற்போது செயற்கை கோள் தொழில்நுட்பத்தை பயின்று வருவதாக தெரிவித்தார்.

தூய்மை மற்றும் சுகாதாரம் தனி மனித ஒழுக்கமாக மாறும்போது சுற்றுப்புறம் தூய்மை அடையும் என்று குறிப்பிட்ட பிரதமர், நாட்டின் பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்படும் தூய்மை முயற்சிகள் தொடர்ந்து உத்வேகம் அளிப்பதாக கூறினார்.

வேளாண் துறையில் புதுமைகளின் அவசியத்தை எடுத்துரைத்த பிரதமர், கொடைக்கானலை சேர்ந்த விவசாயி சந்திரசேகரன் அவகோடா பழ சாகுபடியில் கூடுதல் வருமானம் ஈட்டுவதாக சுட்டிக்காட்டினார்.

பிரதமருக்கு நன்றி தெரிவித்துக்கொண்ட விவசாயி எமது திண்டுக்கல் செய்தியாளரிடம் பேசுகையில்

வாய்ஸ்

நம் நாட்டின் வரலாற்று சிறப்புகளை அறிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள Bharatrajya.com இணையதளத்தை உருவாக்கிய மும்பையை சேர்ந்தவருக்கு பாராட்டு தெரிவித்த பிரதமர் இந்த இணையதளத்தின் வாயிலாக ஏதேனும் ஒரு ஆண்டை தேர்ந்தெடுத்து அக்காலகட்டத்தில் ஆண்ட மன்னர்கள் குறித்து தகவல்களை மக்கள் அறிந்துகொள்ள முடியும் என்றார்.

திருவிழாக்களும் கொண்டாட்டங்களும் நமது பாரம்பரியத்தை பாதுகாப்பதுடன் மக்களிடையேயான உறவுகளை மேம்படுத்துவதாக கூறிய பிரதமர் எதிர்வரும்

கோகுலாஷ்டமி, விஸ்கர்மா பூஜை உள்ளிட்ட பண்டிகைகளுக்கு நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்.

பண்டிகை காலங்களில் உள்ளூர் தயாரிப்புகளுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும் என்று அறிவுறுத்திய பிரதமர் இதன்மூலம் நாடு தன்னிறைவை அடைவதற்கான பாதையை உருவாக்க முடியும் என்றார்.

**************

பிரதமர் உஸ்பெகிஸ்தான்

பிரதமர் திரு.நரேந்திரமோடி உஸ்பெகிஸ்தான் அதிபர் ஷௌக்கத் மிர்சியோ-ஏ-வுடன் தாஸ்கண்டில் இன்று இருதரப்பு பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

இதில் இருநாடுகளுக்கிடையே வர்த்தகம் முதலீடு, பாதுகாப்பு, டிஜிட்டல் இணைப்பு எரிசக்தி, கல்வி, உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்பு குறித்து விரிவாக விவாதிக்கப்பட உள்ளது.

முன்னதாக யோகா கூட்டமைப்பு ஏற்பாடு செய்த யோகா நிகழ்ச்சியில் பிரதமர் பங்கேற்றார்.

**************

குடியரசு துணை தலைவர்

நம்பகதன்மையுடனான செய்திகள் இதழியல் துறையில் மிக முக்கியமானது என்று குடியரசு துணை தலைவர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

கேரள கௌமுதி நாளிதழின் 115ஆவது ஆண்டு கொண்டாட்டங்களை தொடங்கிவைத்து பேசிய அவர், நூற்றாண்டுக்கும் மேலாக இதழியல் துறையில் பணியாற்றி வரும் நாளிதழுக்கு பாராட்டு தெரிவித்தார்.

இரண்டு நாள் பயணமாக இன்றுகாலை கொச்சி சென்றடைந்த அவர், ஆரன் முலா படகு போட்டியை தொடங்கிவைக்கிறார்.

திருவனந்தபுரத்தில் நடைபெறும் ஓணம் சுற்றுலா வார விழாவின் பிரம்மாண்ட நிறைவு பேரணியை குடியரசு துணை தலைவர் தொடங்கிவைக்கிறார்.

**************

நிர்மலா சீதாராமன்

நாட்டின் கடன் அளவை வரும் 2030-ஆம் ஆண்டிற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 50 சதவிகித அளவிற்கு குறைக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க சிகாகோவில் இந்திய வம்சாவளியினரிடையே உரையாற்றிய அவர், சரக்கு கப்பல் போக்குவரத்தில் சவாலான சூழல் நிலவியபோதிலும் இந்தியாவில் உரம், கச்சா எண்ணெய், LPG விநியோகம் சீராக இருந்ததாக குறிப்பிட்டார்.

சரக்கு கப்பல்களின் காப்பீட்டு கட்ட கட்டணங்கள் உயர்ந்த நிலையில், மத்திய அரசு உரிய நிதி ஒதுக்கீடு செய்ததாக குறிப்பிட்டார்.

2047-ம் ஆண்டு வளர்ச்சி அடைந்த இந்தியா இலக்கை அடைவதற்கு மேற்கொள்ளப்படும் சீர்திருத்தங்கள் முடுக்கிவிடப்பட வேண்டியதன் அவசியத்தை நிதியமைச்சர் வலியுறுத்தினார்.

**************

மாண்டவியா

இளைஞர்கள் உடல் ஆரோக்கியத்தை பேணிக்காக்க நாள்தோறும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை மத்திய இளைஞர் நலன் விளையாட்டு துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லியில் இன்று நடைபெற்ற 88ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் சைக்கிள் பயிற்சியில் பங்கேற்ற பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், சுற்றுச்சூழல் மாசுபாட்டிற்கு சைக்கிள் பயிற்சி சிறந்த தீர்வாக அமையும் என்றார்.

**************

நுகர்வோர் விவகாரம்

சட்ட அளவியல் விதிகள் 2026 –ஐ மத்திய நுகர்வோர் விவகாரங்கள் துறை அறிவித்துள்ளது.

இதன்படி நாடுமுழுவதும் பொதுவான நேர குறியீடாக இந்திய திட்ட நேரம் IST விதிகள் வகுக்கப்பட்டுள்ளன.

சட்ட ரீதியான நிர்வாக வணிக மற்றும் பிற அதிகாரப்பூர்வ நோக்கங்களுக்கான பொதுவான நேரக்குறியீடு, வங்கி மற்றும் டிஜிட்டல் பண பரிவர்த்னைகளில் துல்லியமான நேரப்பதிவு, ரயில்

விமான நிலையங்கள் மற்றும் பிற போக்குவரத்து அமைப்புகளை ஒருங்கிணைப்பது அவசர மற்றும் நேரம் சார்ந்த சேவைகளை ஒருங்கிணைக்க இது வழிவகுக்கும்.

**************

நேபாளம்

நேபாள பெருவெள்ளத்தில் சிக்கியுள்ள தமிழ்நாட்டை சேர்ந்த 219 பேர் இவ்வாரத்திற்குள் தாயகம் திரும்புவார்கள் என மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் தெரிவித்துள்ளார்.

சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் மேலும் 100 பேர் குறித்த தகவல்கள் இதுவரை கிடைக்கப்பெற வில்லை என்றும், அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் கூறினார்.

தொடர்ந்து பெரம்பலூரில் அரசு கட்டிடங்களை இன்று திறந்து வைத்து 166 பயனாளிகளுக்கு ஒரு கோடியே 40 லட்ச ரூபாய் மதிப்பிலான நல திட்ட உதவிகளை வழங்கி பேசிய அவர், சிலிண்டர் தீ விபத்துகளில் பாதிக்கப்பட்டுவர்களுக்கு தேவையான உதவிகளை அரசு வழங்கும் என்றார்.

**************

தொல் திருமாவளவன்

தமிழக அரசு தாழ்த்தப்பட்ட மக்களின் பாதுகாப்புக்கான தனி சட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வேண்டும் என்று விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திரு.தொல் திருமாவளவன் கேட்டுக்கொண்டுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தாழ்த்தப்பட்ட மக்களுக்கான நல திட்டங்களை செயல்படுத்த அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள தமது கட்சி நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்றார்.

**************

போதை பொருள்

போதையில்லா தமிழகம் என்பதை வலியுறுத்தி மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இன்று விழிப்புணர்வு மாரத்தான் நடைபெற்றது.

தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் விழிப்புணர்வு மாரத்தான் போட்டியை ஆட்சித்தலைவர் திரு.ரஞ்சித் சிங் தொடங்கிவைத்தார்.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் இதில் கலந்துகொண்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

வாய்ஸ்

விழுப்புரத்தில் நடைபெற்ற சிறார் மாரத்தான் போட்டியில் 500க்கும் மேற்பட்ட சிறுவர் சிறுமியர் பங்கேற்றனர்.

திருப்பூரில் மகளிர் பங்கேற்ற போதை பொருள் எதிர்ப்பு விழிப்புணர்வு மாரத்தான் நடைபெற்றது.

**************

இருவரி

நாடுமுழுவதும் குடிமை பணிகளுக்கான UPSC முதன்மை தேர்வு இன்று நடைபெறுகிறது.

ஆயிரத்து 16 காலிப்பணியிடங்களுக்கான இத்தேர்வை 13 ஆயிரத்து 343 பேர் எழுதுகின்றனர்.

பெரம்பலூர் மாவட்டத்தில் மானிய விலையில் எண்ணெய் பனை கன்றுகள் வழங்கப்பட்டு வருவதாக ஆட்சித்தலைவர் திருமதி சரண்யா அறி தெரிவித்துள்ளார்.

விவசாயிகளுக்கு ஊடுபயிர் மற்றும் பராமரிப்பு செலவிற்காக ஹெக்டேர் ஒன்றுக்கு ஐயாயிரத்து 250 ரூபாய் வழங்கப்படுவதாக அவர் கூறினார்.

நீலகிரி மாவட்டம் கூடலூர் ஓவேலி லாரஸ்டன் பகுதியில் நடமாடும் புலியை பிடிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஆட்சித்தலைவர் திருமதி லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

திருவண்ணாமலை அண்ணாமலையார் திருக்கோவிலுக்கு பக்தர்கள் செல்ஃபோன் கொண்டு செல்ல வரும் ஒன்றாம் தேதிமுதல் தடைவிதிக்கப்பட்டுள்ள நிலையில் ராஜகோபுரத்தை சுற்றியுள்ள ஐந்து இடங்களில் இதற்கான பாதுகாப்பு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

**************

கோவில்

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் ரோப்கார் சேவை வருடாந்திர பராமரிப்பு பணி காரணமாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பக்தர்கள் மின் இழுவை ரயிலை பயன்படுத்துமாறு கோவில் நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் ஆவணி திருவிழா நாளை காலை கொடியேற்றத்துடன் தொடங்குகிறது.

இதனை ஒட்டி நள்ளிரவு 1 மணிக்கு கோவில் நடை திறக்கப்பட்டு உதய மார்த்தாண்ட அபிஷேகம் நடைபெறும்.

முக்கிய நிகழ்ச்சியான தேரோட்டம் வரும் 9ஆம் தேதி நடைபெறும்.

**************

தண்ணீர் திறப்பு

திருப்பூர் மாவட்டம் அமராவதி அணையிலிருந்து இன்று தண்ணீர் திறக்கப்பட்டது.

வரும் 7-ம் தேதிவரை நாளொன்றுக்கு ஆயிரம் கனஅடி வீதம் திறக்கப்படும் இந்த தண்ணீரின் மூலம் திருப்பூர், கரூர் மாவட்ட மக்களின் குடிநீர் தேவை பூர்த்தி செய்யப்படும்.

**************

மேட்டூர்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று வினாடிக்கு ஆறாயிரத்து 887 கன அடியாக குறைந்துள்ளது.

அணையிலிருந்து குடிநீர் தேவைக்காக 2 ஆயிரம் கன அடி நீர் திறக்கப்படுகிறது.

அணையின் நீர்மட்டம் 90.3 அடியாகும்.

ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து இன்று வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடியாக அதிகரித்துள்ளது.

**************

வானிலை

வளிமண்டல காற்றழுத்த தாழ்வு பாதை காரணமாக மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் சென்னை செங்கல்பட்டு திருவள்ளூர் காஞ்சிபுரம் ராணிப்பேட்டை வேலூர் திருவண்ணாமலை விழுப்புரம் மாவட்டங்களின் ஒரிரு இடங்களில் இன்று இடி மின்னலுடன் கூடிய மழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தென் தமிழக கடலோர பகுதிகள் மன்னார் வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய குமரிக்கடல் பகுதிகளில் மணிக்கு 45 முதல் 55 கிலோ மீட்டர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதால் மீனவர்கள் இப்பகுதிகளுக்கு செல்ல வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

**************

கிரிக்கெட்

ஆசிய கோப்பை மகளிர் 20-20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா இன்று தாய்லாந்தை எதிர்கொள்கிறது.

துபாயில் இரவு எட்டரை மணிக்கு இப்போட்டி நடைபெறும்.

**************

டென்னிஸ்

U.S. ஓப்பன் டென்னிஸ் போட்டிகள் நியூயார்க்கில் இன்று தொடங்குகின்றன.

வரும் 13ஆம் தேதி வரை நடைபெறும் இப்போட்டியில் ஆடவர் பிரிவில் இத்தாலியின் ஜானிக் சின்னர், ஸ்பெய்னின் கார்லஸ் அல்க்காரஸ், ஜெர்மனியின் அலெக்ஸாண்டர் சவ்ரவ் உள்ளிட்டோரும்,

மகளிர் பிரிவில் பெலாரஸின் அரினா சபலென்கா, கஜகஸ்தானின் எலினா, போலந்தின் இகா ஸ்வியாடெக் உள்ளிட்டோரும் களமிறங்குகின்றனர்.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது